செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 348 நாள் : 15/6/17

# பத்திரிகைச் செய்தி

+2 பொதுத்தேர்வில் கணித பாடப்பிரிவில் 85% –க்கு (1020 மதிப்பெண்களுக்கு) மேல் மதிப்பெண் பெற்ற மாணவ மாணவிகளுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய கல்வி வழங்க HCL நிறுவனம் முன் வந்துள்ளது இந்நிகழ்வில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு மாதம் தோறும் ரூ.10,000/– ஊக்க தொகையாக ஒரு வருடத்திற்கு வழங்கும், மேலும், பயிற்சி முடிந்தவுடன் வருடத்திற்கு ரூ.2.20 லட்சம் ஆண்டு ஊதியமாக வழங்க இருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் பணி செய்துகொண்டே உயர் கல்வி MCA/MSc(IT) போன்ற பாடங்களில் தொடர்ந்து படிப்பதற்கு அனுமதிக்கும்.

இந்நிகழ்ச்சிக்கு தங்கள் பள்ளியில் படித்த தகுதிவாய்ந்த மாணவர்களை பெற்றோர்களுடன், வேலூர், சத்துவாச்சாரி ஹோலிகிராஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் பிற்பகல் 1.30 மணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தலைமையிலும், மாண்புமிகு வணிகவரி மற்றும் பத்திர பதிவுத்துறை அமைச்சர் திரு கே.சி.வீரமணி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திருமதி நீலோபர் கபில் அவர்களின் முன்னிலையில் நடைபெற இருக்கும் நிகழ்ச்சிக்கு தவறாமல் கலந்துகொண்டு வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ள மாணவர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

முதன்மைக்கல்வி அலுவலர்,
வேலூர்.

நிகழ்ச்சி நடைபெறும்

இடம் : ஹோலிகிராஸ் பள்ளி

நாள் : சனிக்கிழமை

தேதி : 17.06.2017

நேரம் : பின்பகல் 1.30

செ.ம.தொ.அ., வேலூர்-9.